# அது மிகச் சிறந்த புறா



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பனிவெண்புறா சிறகுகள் மேல்

ON THE WINGS OF A SNOW-WHITE DOVE

லைஃப் கூடாரம் ஷ்ரீவ்போர்ட், லூயிசியானா, அமெரிக்கா

நவம்பர் 28, 1965

119. வேதத்தில் புறா சமாதானத்துக்கு அடையாளமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. அது சமாதானத்தில் அடையாளமாய் தேசங்களால் உபயோகிக்கப்பட்டுள்ளது. நமக்கு தேசம்கள் உண்டு... நமது தேசத்துக்கு கழுகு சின்னமாக அமைந்துள்ளது. மற்ற நாடுகளுக்கு


மற்ற பறவைகள் உண்டு. ரோமாபுரிக்கு ஒரு கழுகு, ஜெர்மனிக்கு ஒரு கழுகு; தேசங்கள் பலவற்றிற்கு வானத்தின் பெரிய பறவைகள். ஆனால் அந்த எல்லா நாடுகளுக்கும் புறா சமாதானத்துக்கு அடையாளமாய் உள்ளது. அது உலகம் முழுவதும் கைகொள்ளப்படும் ஒன்று.





120. ஒரு இரவு சகோ, கிரீன்–சகோ.பெர்ரீ கிரீன் கூறினது போல். அவர், ”சரணடைந்ததற்கு அடையாளம் கைகளை உயர்த்துவதே. உலகத்திலுள்ள எந்த நாட்டிலும் கைகளை உயர்த்துதல் சரணடைந்ததற்கு அடையாளமாயுள்ளது. நீங்கள் பாடும்போது கைகளை

உயர்த்தினால், நீங்கள் சரணடைந்து எல்லாவற்றையும் ஒப்புவிக்கின்றீர்கள் என்று அர்த்தம்' என்றார்.



121. அது போன்று புறாவும் எல்லா நாடுகளிலும் சமாதானத்துக்கு அடையாளமாயுள்ளது. அது ஏன்

அப்படி செய்யப்படுகிறது? ஏனெனில் அது சாந்தமும் களங்கமற்றதாயும் உள்ளது. அதன் காரணமாகத் தான் அது சமாதானத்துக்கு அடையாளமாயுள்ளது.



122. புறாவைக் குறித்து வேறொன்று, அது வீட்டை விரும்பும் பறவை. அது வீட்டில் தங்கியிருக்க விரும்புகிறது.



123. வேறொரு காரியம் என்னவெனில், அது எப்பொழுதும்‘

தன் துணைக்கு விசுவாசமுள்ளதாய் இருக்கிறது. புறா, ஆணானாலும், பெண்ணானாலும், தன் துணையை விட்டுச் செல்வதில்லை. பெண்புறா தன் துணையை இனச்சேர்க்கையின் காலத்தில் கண்டுபிடிக்கிறது.. பாருங்கள், அது தேவனுடைய மகத்தான சிருஷ்டிக்கு புகழாக அமைந்துள்ளது. ஏவாளை அவர் உபபொருளாக படைத்தார். பாருங்கள்? அவள் மற்ற பெண் இனங்களைப் போல் சிருஷ்டிக்கப் பட்டிருந்தால்.

இனச்சேர்க்கையின்போது அவள் தன் துணைவனைக். கண்டுபிடித்திருப்பாள். பாருங்கள்? அது தான் முறை. அப்படி தான்

அது இருந்திருக்கும். நான்... அதை இப்பொழுது நாம் பார்க்க விரும்பவில்லை. ஏனெனில் விவாகமும், விவாகரத்தும் என்னும் செய்தியில் அது உள்ளது. அது எப்படி... இருப்பினும் அவள் கௌரவமுள்ளவளாய் இருந்து அந்த நற்பண்புகளைக் கொண்டு வந்தாள்.

அதைக் குறித்து அன்றொரு இரவு நான் எப்படி பிரசங்கித்தேன் என்று உங்களுக்குத் தெரியும்.

சரி, கவனியுங்கள். அவளுக்கு ஒரு பெரிய பொறுப்பு உள்ளது.



124. புறா எப்பொழுதுமே தன் துணைக்கு விசுவாசமுள்ள தாய் இருக்கிறது. எப்பொழுதுமே! அதை விட்டு அது செல்வதேயில்லை,

125. இதை கூற ஒரு நிமிடம் நான் நிறுத்த விரும்புகிறேன்.

உண்மையான மணவாட்டி. பெண் புறாவைப் போல் தன் துணை வருக்கு விசுவாசமாயுள்ளவளாய் இருக்கிறாள். அவள் எந்த கொள்கையையும், ஸ்தாபன உபதேசங்களையும், உலக காரியங் களையும் புகுத்த மாட்டாள். அவள் தன் துணைவராகிய வார்த் தைக்கு விசுவாசமுள்ளவளாய் இருப்பாள்; எப்பொழுதுமே விசுவாசமுள்ளவளாய்.





126. அதன் வீடு விரும்பும் தன்மையின் காரணமாக, அது செய்திகளைக் கொண்டு செல்வதற்கென மிகவும் வெற்றிகரமாக உபயோகிக்கப்பட்டு வந்தது. அது வீட்டை

விரும்புவதால், அதை எங்கு அவிழ்த்து விட்டாலும், அது தவறாது வீடு திரும்பி விடும்

127. அதைக் குறித்து சிறிது நேரம் வலியுறுத்த விரும்புகிறேன். இப்பொழுது கிறிஸ்தவர்களாகிய நீங்கள் நான் என்ன கூறுகிறேன் என்பதை புரிந்து கொள்வீர்கள். அது எப்பொழுதுமே வீட்டுக்குச் செல்லும் வழியை கண்டு கொள்கின்றது. எனவே செய்திகளைக் கொண்டு செல்வதற்கென அவை உபயோகிக்கப்படுகின்றன. போர் காலத்தில் அவை உபயோகிக்கப்பட்டு வந்தன. இப்பொழுதும் செய்திகளைக்

கொண்டுசெல்ல இந்த புறாக்கள் உபயோகிக்கப்படுகின்றன. எனவே, புறா. தேவனாலும் மனிதனாலும், தூதைக் கொண்டு செல்ல உபயோகிக்கும் தூதுவனாக உள்ளது. புறா ஒரு தூதுவன். அது நோவாவுக்கும் தூதுவனாக இருந்து, ”மறுபடியும் சமாதானம் நிலவுகிறது’ என்று நோவாவிடம் உரைத்தது. அது அவருடைய குமாரன் என்றும், பூமியின் மேல் சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் கொண்டு வர அவரே பலியாயிருப்பார் என்பதை உறுதிப்படுத்த அது தேவனால் உபயோகிக்கப்பட்டது. அது தூதுவனாக உபயோகிக்கப் பட்டது.

128. இப்பொழுது என் மனதில் ஒரு சிறு வரலாறு எழுகின்றது. அதை ஒரு முறை ஒரு புத்தகத்தில் படித்தேன். அது என்ன புத்தகம் என்று நிச்சயமாக எனக்குத் தெரியவில்லை, அது முதலாம் உலக யுத்தத்தின் வீழ்ச்சி என்னும் புத்தகமாயிருக்கலாம். அதைக் குறித்து எனக்கு நிச்சயமாக தெரியவில்லை. அதில் நீங்கள் இந்த வரலாற்றை காணாவிட்டால். நான் கூறினது: தவறு. அதை ஏதோ ஒரு புத்தகத்தில் படித்தேன். அது பல ஆண்டுகளுக்கு முன்பு. ஆனால் அது நிச்சயமாக... அது உண்மையாக நடந்த ஒன்று.



129. அமெரிக்க போர் வீரர்கள் ஜெர்மானியரின் மெஷின் துப்பாக்கி சுடுதலின் விளைவாக ஒரு குழியில் சிக்கிக் கொண்டனர். இராணுவ வீரர்களாகிய உங்களில் சிலர்,

அவர்கள் எப்படி வேவு பார்க்க சென்றிருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்வீர்கள், அவர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்களிடம் துப்பாக்கி வெடி மருந்து கொஞ்சம் தான் மீதியிருந்தது. ஜெர்மானியர் கள் திரளாக அணிவகுத்து எல்லாவிடங்களிலும் நகர்ந்து. கொண்டிருந்தனர். அவர்களை பலப்படுத்துவதற்காக சேனைகள், சிறிது உதவி, கிடைக்காவிட்டால், அவர்கள் விரைவில் மரித்துப் போவார்களென்று அறிந்திருந்தனர். அவர்கள் மரிக்கத்தான் வேண்டும். ஏனெனில் ஜெர்மானியர்கள் மலையை விட்டு கீழே இறங்கி வந்து, அமெரிக்கர்களுடைய

கழுத்துக்களை கண்டு. அவர்களை நோக்கி சென்று கொண்டிருந்தனர்.



130. அப்பொழுது அமெரிக்க வீரர்களில் ஒருவனுக்கு அவனிடம் ஒரு சிறு புறா இருந்தது ஞாபகம்

வந்தது. இந்த புறா இவர்கள் முகாமிட்டுள்ள தலைமை அலுவலகத்தை அடையுமானால், அது ஒரு செய்தியை அங்குள்ளவர்களுக்கு கொண்டு செல்ல முடியும் என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே அவர்கள், ’நாங்கள் இந்த குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நிலையில் சிக்கிக் கொண்டிருக்கிறோம்.
எங்களிடமிருந்த வெடி மருந்து தீர்ந்து விட்டது. இன்னும் சில மணி நேரத்தில் நாங்கள் சரணடைய வேண்டும். அல்லது கொல்லப்பட வேண்டும்‘ என்று குறிப்பு எழுதி, அதை இந்த சிறு புறாவின்

பாதத்தில் கட்டி விட்டு, அதை பறக்க விட்டனர்.



131. புறா வீடு விரும்பும் பறவை. எனவே அது... அது என்ன செய்கிறது? அது வீடு திரும்பி, இனசேர்க்கைக்காக தன் துணையைக் கண்டுபிடிக்கிறது. அந்த பெண் புறா. இந்த ஆண் புறா வீடு திரும்ப வேண்டுமே என்று கவலை கொள்கிறது.



132. அந்த புறா பறந்து சென்ற போது, ஜெர்மானியர்கள் அதை கண்டு விட்டனர்.



அவர்கள் என்ன செய்தனர் என்றால், அந்த புறாவை நோக்கி சுட்டனர். அவர்களில் ஒருவன் சுட்ட.

30 தோட்டா அதன் காலை உடைத்தது.

மற்றொரு தோட்டா அதன் முதுகிலுள்ள பெரிய மாமிசத்தை பிய்த்து விட்டது. அதன் மார்பு நொறுக்கப்பட்டது.

அதன் சிறகுகளில் ஒன்று அடிபட்டு, ஊனமாகி, அது பக்கவாட்டில் பறந்தது.

அப்படியிருந்தும் அது பறந்து அந்த இடத்தை அடைந்தது. ஊனமடைந்து, காயப்பட்டு, உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்ட போதிலும், அந்த செய்தியுடன் அது முகாமை அடைந்தது. அது மிகச் சிறந்த புறா.



133. ஆனால், ஓ. சகோதரனே, வீட்டிலிருந்து எல்லா நன்மைகளையும் விட்டு கீழே இறங்கி வந்த ஒருவரைக் குறித்து

ஏசாயா 53ம் அதிகாரம் உரைக்கிறது.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

ஏசா, 53:5

134. வியாதி, மூட நம்பிக்கை, பிசாசுகள் ஆகிய அனைத்தும் நம்மை சிக்க வைத்திருந்தன. நமக்கு வழியே இல்லாமல் இருந்

தது. சபை தவறான வழியில் சென்றது. அவர்கள் ஸ்தாபன வழி களில் ஈடுபட்டிருந்தனர் (புரிசேயர்கள், சதுசேயர்கள், கிண்ணங்கள், செம்புகள் போன்றவைகளைக் கழுவும் விஷயத்தில்). தேவனுடைய வார்த்தையை அவர்கள் அவமாக்கினர். ஆனால் இந்த சிறு புறா கீழே இறங்கி வந்தது. அங்கு ஒரு காரியம் மாத்திரமே சம்பவிக்க முடியும்: ஒரு மீட்பர் வர வேண்டும்.

★★★★★